**நெலுவ பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 19 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து நெலுவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 234,970 தொகையான செலுத்த வேண்டிய செலவுகளுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | முன்னைய ஆண்டின் போது ரூபா 38,394,004 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பஹல மில்லவ பாலம் மற்றும் ரூபா 1,393,510 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த குப்பை களஞ்சிய செயற்களத்தை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த பங்களிப்புத் தொகை ரூபா 7,141,037 தொகைக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | சபைக்குச் சொந்தமான பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 45,665 தொகைக்கான ஓவசியர் வெளிக்கள களஞ்சிய இருப்பொன்று கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | களஞ்சிய இருப்பு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தூவிலிஎல்ல, சந்தை மற்றும் மீன் விற்பனை நிலைய வாடகை டென்டர்களின் மூலம் ரூபா 1,087,583 தொகை நிலுவை வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (எ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சேமிப்புக் கணக்கு ரூபா 41,548 தொகைக்கான வட்டியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஏ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 161,250 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 07 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 61,600,177 இற்கான வித்தியாசம் ஒன்று காட்டப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) 03 வங்கி நடைமுறை கணக்குகள் தொடர்பான நிலுவைச் சமன்பாட்டில் காட்டப்பட்டுள்ள மீதிகள் மற்றும் காசேட்டில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 73,362 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைச் சமன்பாட்டில் காட்டப்பட்டுள்ள பெறுமதி மற்றும் பிரதான பேரேட்டில் காட்டப்பட்டுள்ள பெறுமதி இடையே ரூபா 6,405,790 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆண்டு முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 21,176 தொகைக்கான தொங்கல் கணக்கின் செலவு மீதியை இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொண்டு கணக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொங்கல் கணக்கின் மீதிகளை தீர்க்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெறவேண்டிய கணக்கு** | | |
| (i) 2014 ஆண்டில் 07 அபிவிருத்திச் செயற் திட்டங்களுக்காக உள்ளூராட்சித் திணைக்களத் திலிருந்து பெறவேண்டிய ரூபா 3,572,194 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வேன் என அறிவிக்கின்றேன். |
| (ii) 2008 ஆண்டு முதல் நிலுவையாக காணப்படும் வாராந்த சந்தையில் ஒரே தடவையில் பெறப்படும் பணம் ரூபா 478,300 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வேன் என அறிவிக்கின்றேன். |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2016 ஆண்டு முதல் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 260,222 தொகைக்கான பொது வழங்கல் கடன்கொடுத்தோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்தவேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | ரூபா 1,225,846 தொகைக்கான மூலதனச் செலவுகள் கடன்கொடுத்தோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்தவேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை வேண்டும். | அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

**தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 126,577,322 தொகைக்கான 17 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப் பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 33 | ஏக்கர்வரி செலுத்துவதை புறக் கணித்துள்ள நபர்கள் தொடர் பான அட்டவணை ஒன்று மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் செயற்படுவேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) விதி 193 | பாதீட்டுடன் செலவு விடயங்களைஇணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறை களுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் செயற்படுவேன். |
| (iii) விதி 218 | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் வருடாந்தம் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் குறிப்பிட்டவாறு செயற்படுவேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 702(3) | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்பமிடப்படும் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | நிதிப் பிரமாணங்களின் படி செயற்படுவேன். |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 1645 - 1646 | சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் படி செயற்படுவேன். |
| (இ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக் | ஓட்ட நிலையில் காணப்படும் 08 வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்படும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,121,063 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,159,098 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 515,590 | 393,798 | 389,822 | 67,659 | 415,500 | 446,990 | 467,852 | 63,683 |
| வாடகை | 7,565,850 | 7,659,835 | 6,643,383 | 1,601,398 | 7,369,300 | 7,264,900 | 6,960,092 | 584,946 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 263,000 | 189,119 | 189,119 | 17,835 | 184,300 | 201,003 | 201,003 | 17,835 |
| சேவைகளுக்கான கட்டணம் | 1,059,500 | 1,422,924 | 1,422,924 | - | 853,150 | 1,196,752 | 1,196,752 | - |
| | 9,403,940 | 9,665,676 | 8,645,248 | 1,686,892 | 8,822,250 | 9,109,645 | 8,825,699 | 666,464 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஏக்கர் வரி**<br>மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 27,364 தொகைக்கான ஏக்கர் வரியினை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) வியாபார வரி**<br>முன்னைய ஆண்டு முதல் நிலுவையாக காணப்பட்ட ரூபா 40,295 தொகைக்கான நிலுவை வியாபார வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) கடை வாடகை**<br>மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 513,816 இற்கான நிலுவை கடை வாடகை மீதி ஒன்று காணப்பட்டது. | நிலுவைக் கடை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை கடை வாடகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) வியாபார உரிமையை வாடகைக்கு கொடுத்தல்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான வாராந்தச் சந்தை, மீன் பலகை மற்றும் துவிலிஎல்ல வளவு டென்டர் பண்ணுவதன் மூலமாக அறவிடப்பட வேண்டிய குத்தகை ரூபா 987,400 தொகை காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | டென்டர் மூலம் வாடகைக்கு கொடுத்திருந்த பொதுச் சந்தையின் மின்சாரக் கட்டணம் மற்றும் நீர்க் கட்டணம் சபையினால் செலுத்தப்பட்டமையினால், ரூபா 118,520 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 21,360 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 9,130,160 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. எனினும், பிரதான செயலாளர் அலுவலகத்தின் பதிவின் படி இந்த பெறுமதிகள் சமமின்றி காணப்பட்டது. | வருமானப் பதிவேடுகள் முறைப்பிரகாரம் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **செயல் நடவடிக்கைத் திட்டம்** | | |
| | சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்ட செய்பணி களுக்காக மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | **எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை** | | |
| | கடற்தொழில், கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, சுற்றாடல் அலுவல்கள், கிராமியக் கைத்தொழில்கள், மின் சக்தி, கிராமிய மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் பசுமைச் சுற்றாடல் வலையம் ஏற்படுத்துவதற்காக 2017 ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 375,125 தொகையில் ரூபா 232,625 தொகைக்கான செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களை விரைவாக நிறைவேற்ற வேண்டும். | எதிர்காலத்தில் செயற்திட்டத்தை நிறைவேற்றுவேன் என அறிவிக்கின்றேன். |
| (இ) | **திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்** | | |
| | திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக தனியான அலகு ஒன்று நிறுவப்பட்டு நீண்ட காலத்திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான வேலைத் திட்டமொன்றுக்கு சபை முன்னெடுத்திருக்கவில்லை. | குப்பைகளை அகற்றுவதற்காக நீண்ட கால வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | செயற்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| (ஈ) | **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு** | | |
| | நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 10 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் 05 மிகைகளை முறைப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை பதவிகளை முறைப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| 2018 ஆண்டில் ஓய்வு பெற்ற ஊழியர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 124,890 ற்கான ஊளியர் கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்ய வேண்டும். | நிலுவைக் கடன் மீதியை எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2008 முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதியில் சபைக்கு கிடைத்திருந்த ரூபா 37,053,200 தொகை பெறுமதியான 07 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்படப்படாத வாகனம் ஒன்றினை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை உரித்தாக்கப்படட வேண்டும். | எதிர்காலத்தில் உரிமையை உரித்தாக்க நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3.2 விளைவற்ற / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கைடிரக்டர் 2000 ஆண்டு முதலும் ஹொயிஸ்டர் 2014 ஆண்டு முதலும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | திருத்த முடியாவிடின் அப்புறப்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் ஏல விற்பனை செய்யப்படும் என அறிவிக்கின்றேன். |

## 3.4 பெறுகைகள்

### 3.4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பண்டங்கள் வழங்கல் மற்றும் சேவைகளுக்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள் எப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, முறையான உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப்பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவேன். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஒன்று மாத்திரம் நடைபெற்றிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அடுத்த வருடம் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவேன். |